# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் : 10 | கிறிஸ்தவம் | நேரம் : 3 மணி |
|---|---|---|
| | சுட்டெண் ............................................... | |

♦ **மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

## பகுதி - I

01) "இம்மானுவேல்" என்பதன் பொருள் யாது?
1. கடவுள் நம்முடன் இருக்கிறார் 2. கடவுள் துணை
3. கடவுளே பாதுகாப்பு 4. கடவுள் உதவுவார்

02) இயேசு யாருடைய வம்சத்தில் பிறந்தார்?
1. மோசே வம்சத்தில் 2. ஆபிரகாம் வம்சத்தில்
3. தாவீதின் வம்சத்தில் 4. ஈசாக்கு வம்சத்தில்

03) "உமது நம்பிக்கை உம்மை மீட்டது" என இயேசு கூறியது
1. சகேயுவிற்கு 2. பேதுருவிற்கு
3. பாவியான பெண்ணுக்கு 4. தீய ஆவி பிடித்த பெண்ணுக்கு

04) தேசத்து ரோகிகள் என்றும் பாவிகள் என்றும் யூதமக்களால் கருதப்பட்டவர்கள்.
1. பிற இனத்தவர்கள் 2. வரி தண்டுபவர்கள் 3. சது சேயர் 4. பரிசேயர்

05) தம்மை நீதிமான்களாகக் கருதி பெருமை கொண்டவர்கள்
1. பரிசேயர் 2. சதுசேயர் 3. மறைநூல் அறிஞர் 4. சமாரியர்

06) "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என இயேசு கூறியது
1. தீய ஆவி பிடித்தவனுக்கு 2. பெரும்பாடுள்ள பெண்ணுக்கு
3. முடக்கு வாதக்காரனுக்கு 4. சூம்பிய கையுடையவனுக்கு

07) "சதோக்" என்ற வழி மரபில் வந்தவர்கள்
1. பரிசேயர் 2. சதுசேயர் 3. மறைநூல் அறிஞர் 4. சமாரியர்

08) உயிர்த்தெழுதலை நம்பாத குழுவினர்
1. சதுசேயர் 2. பரிசேயர் 3. உரோமையர் 4. சமாரியர்

09) திராட்சைத் தோட்ட குத்தகைக்காரர் உவமையில் தோட்ட உரிமையாளராகக் கூறப்படுபவர் யார்?
1. இயேசு 2. இறைவன் 3. யோவான் 4. பேதுரு

10) திருச்சட்டத்தின் மையம் எது?
1. நம்பிக்கை 2. அன்பு 3. விசுவாசம் 4. பணிவாழ்வு

11) உரோமப் பேரரசுக்கு செலுத்தும் தெனாரியத்தில் யாருடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.
1. இயேசுவின் உருவம் 2. குருக்களின் உருவம்
3. சீசரின் உருவம் 4. பிலாத்துவின் உருவம்

12) "இயேசு எருசலேமுக்கு கழுதையில் சென்றார்" கழுதை எதன் அடையாளமாகக் கருதப்பட்டது.
1. தாழ்மை 2. வீரம் 3. பொறுமை 4. நம்பிக்கை

13) ரபீ என்பதன் பொருள்
1. ஆயன் 2. குரு 3. போதகர் 4. மெசியா

14) இயேசு எருசலேம் ஆலயத்தினுள் இருந்த வியாபாரிகளை விரட்டிய போது கூறிய வசனம்
1. "தந்தையே இவர்களை மன்னியும்" 2. "என் இல்லம் இறை வேண்டலின் வீடு"
3. "உன் விசுவாசம் உன்னை மீட்டது" 4. "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன"

15) இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டதற்காக நன்றி செலுத்தும் தினம்
1. பெந்தகோஸ் விழா 2. கூடார விழா
3. பாஸ்கா விழா 4. அர்ப்பணிப்பு விழா

16) "என் விருப்பப்படி அல்ல உம் விருப்பபடியே நிகழட்டும்" என இயேசு வேண்டுதல் செய்த மலை
1. தபோர்மலை 2. சீனாய்மலை 3. ஒலிவ்மலை 4. எரிமலை

17) இயேசு எத்தனை வயதில் தனது போதகப் பணியை ஆரம்பித்தார்
1. 35 வயதில் 2. 40 வயதில் 3. 20 வயதில் 4. 30 வயதில்

18) இயேசு தொழுகைக் கூடத்தில் வாசித்த வேதபகுதி எது?
1. ஏசாயா 2. எரேமியா 3. ஆதியாகமம் 4. உபாகமம்

19) யூத மதச்சட்டத்தில் ஆண்டவரின் அருள் தரும் ஆண்டினை எவ்வாறு அழைப்பார்
1. விடுதலை வருடம் 2. யூபிலி வருடம்
3. லிப் வருடம் 4. செனகரிம் வருடம்

20) "மருத்துவரே உம்மையே நீர்......."
1. குணமாக்கிக் கொள்ளும் 2. பாதுகாத்து கொள்ளும்
3. வழி நடத்தும் 4. உண்மையாய் இரும்

21) "ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்" என கூறியவர்
1. இயேசு 2. லூக்கா 3. பேதுரு 4. யூதா

22) பேதுருவின் மறு பெயர்
1. கேபா 2. மெசியா 3. நாத்தான் 4. ரபூணி

23) இயேசுவின் சீடரின் வரி தண்டுபவராயிருந்தவர்
1. யோவான் 2. லேவி 3. பிலிப்பு 4. சீமோன்

24) இயேசுவின் வஸ்திரத்தை தொட்டு குணமாகிய பெண் எத்தனை வருடம் அந்த நோயினால் வேதனைப் பட்டாள்
1. 18 வருடம் 2. 12 வருடம் 3. 8 வருடம் 4. 10 வருடம்

25) இயேசு எந்த பரிசேயர் வீட்டில் இருந்து உணவு உண்டார்.
1. சீமோன் 2. யாக்கோபு 3. யூதா 4. தோமா

26) மார்தாள், மரியாள் சொந்த ஊர் எது
1. கலிலோயா 2. பெத்தானியா 3. யூதோயா 4. சீரியா

27) "கர்த்தாவே, உமது கருவியாக என்னை ஆக்கியருளும்" என மன்றாடியவர்
1. அசீசி ஊர் பிரான்சிஸ் 2. டொட்ரிகோ மைக்கஸ்
3. அன்னை திரேசா 4. நெல்சன் மன்டேலா

28) இயேசுவிற்கு மரண தண்டனை விதித்தவர்
1. ஏரோது 2. பிலாத்து 3. நாகமான் 4. பரிசேயர்

29) யூத நீதிமன்றம் எவ்வாறு அழைக்கப்படும்
1. சனகரீம் 2. சினகொக் 3. மண்டை ஓடு 4. சிலோவாம்

30) இரவு நித்திரைக்கு செல்லுமுன் யூதர்கள் ஒப்புவிக்கும் விண்ணப்பம்
1. எல்லாம் முடிந்துவிட்டது
2. பிதாவே இவர்களை மன்னியும்
3. தாகமாயிருக்கிறேன்
4. பிதாவே உமது கரங்களில் எனது ஆவியை ஒப்புவிக்கிறேன்

31) "நீர் கடவுளின் மெசியா" என இயேசுவை அறிக்கையிட்டவர்
1. யோவான் 2. பேதுரு 3. யாக்கோபு 4. மத்தேயு

32) விதைப்பவன் உவமையில் "விதை" எதனைக் கூறுகிறது
1. இறைவார்த்தை 2. நிலம் 3. மனம் 4. அன்பு

33) "செமயோன்" என்பதன் பொருள்
1. கடவுளுள் அன்பு 2. தேவனுடைய பெலன்
3. தேவ அன்பு உண்மை 4. சமாதானம்

34) அறிவற்ற செல்வந்தர் உவமையில் இருந்து நாம் பெறும் படிப்பினை அல்லாதது.
1. உங்களுடைய உடைமைகளை விற்று தர்மம் செய்தல்
2. இயலுமான அளவுஆன்மீகச் சொத்துகளைச் சேகரித்தல்
3. அதிகமாக சொத்து சேர்க்கும் ஆர்வம் அதிகரித்தல்
4. வாழ்க்கையில் உரித்தை கடவுளுக்கு மாத்திரம் கொடுத்தல்

35) நல்ல சமாரியன் உவமையில் சமாரியன்
   a. தான் போன பயணத்தை அர்ப்பணித்தான்   b. தனது நேரத்தை அர்ப்பணித்தான்
   c. தனது சொத்தை அர்ப்பணித்தான்   d. தனது பணத்தை செலவு செய்யவில்லை
   1. bc சரி   2. abc சரி   3. bcd சரி   4. ad சரி

36) தலைவர் என்பவர்
   1. கட்டளை இடுபவர்   2. அதிகாரம் அற்றவர்
   3. கடினமாக நடத்துபவர்   4. பணி செய்யாதவர்

37) இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றதன் மூலம் வெளிப்படும் குணாதிசயம்
   1. அன்பு   2. இரக்கம்   3. மன்னிப்பு   4. தாழ்மை

38) இயேசுவின் உயிர்ப்பின் செய்தியினை கண்களால் கண்டு விளங்கி கொண்டவர்கள்
   1. சிறுவர்கள்   2. பெண்கள்   3. இடையர்கள்   4. படைவீரர்

39) ஒரு கிறிஸ்தவ தலைவனிடம் காணப்பட வேண்டிய தலைமைத்துவப் பண்புகளில் அடங்காதது
   1. சுயதீர்மானம் எடுத்தல்   2. இனிமையாக பேசுதல்
   3. பொறுப்புகளை நிறைவேற்றல்   4. பணிகளை செய்தல்

40) எம்மாவூருக்குச் சென்ற சீடர்களில் ஒருவர்
   1. கிளேயோப்பா   2. பேதுரு   3. யோவான்   4. யாக்கோபு

## பகுதி - II

♦ **முதலாம் வினா கட்டாயமானது ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) 01. பாவங்களை மன்னிக்க தமக்கு அதிகாரம் உண்டென்பதைக் காட்ட இயேசு செய்த அற்புதம் என்ன?
   02. வீரத்தின் அடையாளமாகக் கருதப்பட்ட மிருகம் எது?
   03. யூதர்கள் வருடந்தோறும் விசேடமாகக் கொண்டாடும் விழா எது?
   04. இயேசுவைப்பற்றி அறிந்து அவரைக் காண ஆவலோடு இருந்த அரசன் யார்?
   05. இயேசுவின் உடலை அடக்கம் செய்தவர் யார்?
   06. நாம் சோதனைக்கு உட்படாதிருக்க என்ன செய்ய வேண்டும்?
   07. இயேசு தனது 12 சீடர்களுக்கு கொடுத்த அறிவுரை 2 எழுதுக?
   08. இயேசுவின் சிலுவையை சுமந்து உதவி செய்தவர் யார்?
   09. யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டோர் இருவரை எழுதுக?
   10. இயேசுவைக் காண்பதற்காக எருசலேம் கோவிலில் காத்திருந்தவர்கள் யாவர்?

(2x20 = 20 புள்ளி)

02) 01. இயேசுவின் பிறப்பு முதலில் யாருக்கு அறிவிக்கப்பட்டது?
   02. இயேசுவின் பிறப்பை முன் அறிவித்த தூதன் யார்?
   03. இன்றைய காலத்தில் கிறிஸ்தவராகிய நீர் எவ்வாறு இயேசுவின் பிறப்பை கொண்டாடுவீர்?

(2+3+5 = 10 புள்ளி)

03) 01. திருமுழுக்கு யோவானின் பணி யாது?
   02. திருமுழுக்கு யோவானின் உணவு, உடை யாது?
   03. திருமுழுக்கு யோவானின் போதனை சில தருக?

04) 01. இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன் விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்ட இடங்கள் எவை?
   02. இயேசு கெத்சபனே தோட்டதில் ஜெபம் பண்ணும் படியாக தன்னுடன் அழைத்து சென்ற சீடர்கள் யாவர்?
   03. இயேசுவின் சிலுவை மரணத்தின் ஊடாக நீர் பெறும் படிப்பினை யாது?

(2+3+5 = 10 புள்ளி)

*05) 01. இறையரசின் வளர்ச்சிக்கு உதாரணமாக இயேசு கூறிய உவமைகள் 2 எழுதுக?*

*02. இறையரசின் அடையாளமாக இயேசு செய்த சுகமளித்தல் அற்புதம் 3 எழுதுக?*

*03. இயேசு மரித்தோரை உயிர் பெறச் செய்த சந்தர்ப்பம் 3 தருக?*

*(2+3+5 = 10 புள்ளி)*

*06) 01. திருமண விருந்து உவமையில் முதலில் அழைக்கப்பட்டோர் யார்?*

*02. நல்ல சமாரியன் உவமையில் சமாரியன் அல் யூதனுக்கு செய்த உதவி யாது?*

*03. கிறிஸ்தவராகிய நீர் சமூகத்தில் செய்யும் உதவிகள் 5 தருக?*

*(2+3+5 = 10 புள்ளி)*

*07) விரும்பிய இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக?*

*01. காணமற்போன ஆடு*

*02. இயேசுவின் சிலுவை மரணம்*

*03. இயேசுவின் உயிர்ப்பு*

*04. பரிசேயர்*

*05. திருமுழுக்கு யோவான்*

*(10 புள்ளி)*

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

## கிறிஸ்தவம்

**தரம் : 10**

## விடைகள்

### பகுதி - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01) 1 | 02) 3 | 03) 3 | 04) 2 | 05) 1 | 06) 03 | 07) 2 |
| 08) 1 | 09) 2 | 10) 2 | 11) 3 | 12) 1 | 13) 3 | 14) 2 |
| 15) 3 | 16) 3 | 17) 4 | 18) 1 | 19) 2 | 20) 1 | 21) 3 |
| 22) 1 | 23) 2 | 24) 2 | 25) 1 | 26) 2 | 27) 1 | 28) 2 |
| 29) 1 | 30) 4 | 31) 2 | 32) 1 | 33) 2 | 34) 3 | 35) 2 |
| 36) 1 | 37) 4 | 38) 2 | 39) 1 | 40) 1 | | |

### பகுதி - II

01)
- 01. முடக்கு வாதம் உற்ற மனிதனை இயேசு சுகமாக்கியது
- 02. குதிரை
- 03. பாஸ்கா விழா
- 04. ஏரோது
- 05. அரிமத்திய ஊரிலுள்ள யோசேப்பு
- 06. ஜெபம் செய்ய வேண்டும்
- 07. பணியின் போது எடுத்து செல்ல கூடாதவை
  (கைதடி, பை, உணவு, பணம், ஒன்றுக்கு மேற்பட்ட அங்கு)
  எளிமையான வாழ்வு
  நற்செய்தியை ஏற்று கொள்வோருடன் தங்கி இருத்தல் ஏற்றுக்கொள்ளாதவரிடம் இருந்து கால் தூசியை உதறிவிட்டு புறப்பட்டு செல்லுதல்
- 08. சீமோன்
- 09. பெண்கள், சிறுவர், நோயாளார், ஏழைகள், பிற இனத்தவர், வரி தண்டுவோர், பாவிகள்
- 10. அன்னா, சிமியோன்

02)
1. இடையர்களுக்கு
2. காபிரியேல் வானதூதன்
3. மாணவர்களது விடைகளுக்கு ஏற்ப புள்ளி வழங்கவும்

03)
1. மனம் திரும்புதலுக்கு அடையாளமாக திருமுழுக்கு கொடுத்தல்
2. உணவு - வெட்டுக்கிளி, காட்டுத் தேன்
   உடை - ஒட்டகத்தோல்
3. * பொது மக்களுக்கு:- இரண்டு அங்கிகளை உடையவர், இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவு உடையவரும் அவ்வாறே செய்யட்டும்
   * அரச பணியாளர்:- உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்
   * உரோம படைவீரர்:- நீங்கள் எவரையும் அச்சுறுத்தி பணம் வாங்காதீர், யார் மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர், உங்கள் ஊழியமே போதும் என்று எண்ணாதீர்
   * யூத மதத்தலைவருக்கு:- ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர் இக்கற்களில் இருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்ய கடவுள் வல்லவர்.

04)
1. தலைமைகுரு சங்கம் → பிலாத்து → ஏரோது
2. பேதுரு, யோவான், யாக்கோபு
3. மாணவர் விடைக்கு ஏற்ப புள்ளி வழங்கவும்

05)
1. கடுகுவிதை உவமை
   விதைப்பன் உவமை
   புளித்தமா உவமை
2. மாணவர் விடைக்கு ஏற்ப புள்ளி வழங்கவும்

*03.* ஜவீரு மகள்
விதவையின் மகள்
லாசரு

} உயிர் அடைய செய்தார்

*06)* *01.* யூதர்கள்
*02.* மாணவர் விடைக்கு ஏற்ப புள்ளி வழங்கவும்
*03.* மாணவர் விடைக்கு ஏற்ப புள்ளி வழங்கவும்

*07)* மாணவர் விடைக்கு ஏற்ப புள்ளி வழங்கவும்